2023 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் வேறு எங்கும் இல்லாத அளவிற்குத் தமிழ்நாட்டில் புதிதாகக் கொடைக்கானலில் இதுபோன்ற ஒரு பயிற்சி நிலையம் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சென்ற கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டு, இப்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆகவே, எல்லா இடங்களிலும் பயிற்சி நிலையங்கள் அமைக்க வேண்டுமென்பது நோக்கம் அல்ல. இருக்கின்ற இடங்களில் உள்ளவர்களுக்குப் பயிற்சி அளிப்பது ஏதுவாக இருக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 186.* (குறுக்கீடு) *மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி 25% வேலை முடிந்திருக்கிறது. அதனை மாற்றப் போவதாகச் சொல்கிறார்கள். அது உண்மையா, இல்லையா என்பதை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.*

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி, மூலக் கேள்விக்கு தொடர்பில்லாதது. தேவையிருந்தால், அக்கறையிருந்தால், அதற்குத் தனியாகக் கேள்வி எழுப்பினால், முழுமையான விவரம் அளிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 186, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பரந்தாமன், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

186—

குடியிருப்புகள்

***48998—திரு. இ. பரந்தாமன்:**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2023 ஏப்ரல் 19

எழும்பூர் தொகுதி, 5-வது மண்டலம், 61-வது வார்டு, அய்யாசாமி குடிசைப் பகுதியில் வசிப்பவர்களுக்கு அத்தொகுதிக்குள்ளேயே குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எழும்பூர் தொகுதியில் புதிதாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பரந்தாமன் அவர்கள்.

முற்பகல் 10-40

திரு. இ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழும்பூர் தொகுதி, மண்டலம் 5, வார்டு எண் 61 அய்யாசாமி குடிசைப் பகுதி என்பது பிரிட்டிஷ் காலத்தில் கட்டப்பட்ட ஒரு arch canal மேல் மக்கள் வசித்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களையெல்லாம் அங்கிருந்து அப்புறப்படுத்திவிட்டு, அந்த canal-ஐ பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தால் மழைக் காலங்களில் வெள்ளத்தால் பாதிப்பு இல்லாமல் இருக்கும் என்ற காரணத்தினால்தான் அவர்களை குடியமர்த்த வேண்டுமென்றால், அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, எதிர்காலத்தில் அவை வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த இடத்திலிருந்து அவர்களை அப்புறப்படுத்திவிட்டால் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுகிற இடத்தில் இவர்களைக் குடியமர்த்தும்போது எதிர்காலத்தில் மழை வெள்ளத்தால் பாதிப்பில்லாமல் இருக்கும். அரசுக்கும் அதிகமான செலவில்லாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே மண்டலத்தில் வார்டு எண் 58-ல் சந்தோஷ் நகர் பகுதியில் 530 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. இன்னும்

2023 ஏப்ரல் 19]

அவை மக்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்படவில்லை. மக்கள் வெளியிலே வாடகைக் கொடுத்து குடியிருந்து வருகிறார்கள். பல வருடங்களாக அவர்கள் வெளியிலே இருக்கிறார்கள். எனவே, எப்போது அந்தக் குடியிருப்பைப் பயனாளிகளுக்கு ஒப்படைப்பார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தோஷ் நகர் பகுதியில் சிதலமடைந்த 272 குடியிருப்புகளை இடித்துவிட்டு, 6–3–2020 அன்று புதிய குடியிருப்புகள் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டு, ரூபாய் 72 கோடியே 51 இலட்சம் மதிப்பீட்டில் 560 புதிய குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இக்குடியிருப்புகளுக்கான மின் இணைப்புப் பணிகள் முடிக்கப்பட்டு, குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. இன்னும் ஓரிரு மாதங்களில் இந்தப் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு, ஏற்கெனவே குடியிருந்த 272 குடியிருப்புதாரர்களுக்கு வீடுகள் வழங்கப்படும். எஞ்சியிருக்கிற வீடுகள் அந்தப் பகுதியிலே தகுதியுள்ள ஏழைகள் மற்றும் பயனாளிகளுக்கு வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பரந்தாமன் அவர்கள்.*

திரு. இ. பரந்தாமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிக விரைவாக அவை ஒப்படைக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழா வருகின்ற ஜூன் மாதத்தில், ஏழையெளியோருக்கு எந்த வீட்டு வசதி வாரியத்தை அவர் உருவாக்கித் தந்தாரோ, அந்தத் தலைவருடைய நூற்றாண்டு விழாவின்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரங்களால் ஒப்படைத்தால் நன்றாக இருக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோன்று அதே மண்டலத்தில் கண்ணப்பர் திடல் பகுதி இருக்கிறது. அந்தக் கண்ணப்பர் திடல் பகுதியில் புதிதாகக் குடியிருப்புகள் கட்டுவதற்காக சென்னை மாநகராட்சியும், நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியமும் இணைந்து கூட்டங்கள் நடத்தி இடத்தை மாநகராட்சி வசம் ஒப்படைப்பதற்கு முடிவு செய்யப்பட்டு, மாநகராட்சி மாமன்றத்தினுடைய தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இரண்டு, மூன்று முறை அந்த இரண்டு துறைகளினுடைய அலுவலர்கள் ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறார்கள். மாநகராட்சி இடம் தருவதற்குத் தயாராக இருக்கிறது. நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தினர் இந்த இடத்தைப் பயன்படுத்தி கட்டடத்தைக் கட்டி மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர முன்வருவார்களா; அந்தத் திட்டத்தை எப்போது நடைமுறைக்குக் கொண்டு வருவார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, சந்தோஷ் நகரில் நிச்சயமாக நம்முடைய அரசு மீதம் இருக்கிற அந்தப் பயனாளிகளுக்கு இரண்டே மாதங்களில் வீடுகள் வழங்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கண்ணப்பர் திடலைப் பொறுத்தவரையில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5, வார்டு எண் 58-ல் உள்ள பகுதியில் மாநகராட்சிக்குச் சொந்தமான, பழுதடைந்த நிலையில் இருந்த வணிக வளாகம் மற்றும் அதன் அருகில் உள்ள காலியிடத்தை இணைத்து 1.83 ஏக்கர் பரப்பிலே புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கு மாநகராட்சியிடம் வாரியத்தால் இடம் கோரப்பட்டிருக்கிறது. புதிய இடத்தில் கட்டப்படும் குடியிருப்புகளின் எண்ணிக்கை மற்றும் பரப்பளவு குறித்த விவரங்களை, சென்னை மாநகராட்சியிடம் 3-8-2022 அன்று வாரியம் கோரியது. அதன்படி, இந்தத் திட்டப் பகுதியில் 400 சதுர அடி பரப்பில் 132 குடியிருப்புகள் கட்டுவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு, நிலத்தை ஒப்படைக்கக் கோரும் கடிதம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 17-1-2022 அன்று வாரியத்தால் அனுப்பப்பட்டிருக்கிறது.

2023 ஏப்ரல் 19]

இந்த நிலையிலே பெருநகர சென்னை மாநகராட்சி அதிகப்படியான குடியிருப்புகளைக் கட்டித்தர வேண்டுமென்று கோரியதன் அடிப்படையிலே, 250 சதுர அடியிலே 594 வீடுகளும், 350 சதுர அடியிலே 577 வீடுகளும் கட்ட 2 plan*-கள் போட்டு மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. மாநகராட்சி எந்த* design *வேண்டுமென்று கேட்கிறார்களோ, அந்த* design *படி வீடுகளைக் கட்டி, அந்தப் பகுதியிலே ஏழைகளுக்கு விரைவில் வீடுகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 187, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 188, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

188—

அங்கன்வாடி மையம்

***7565—திரு. தி. வேல்முருகன்:**

மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரம், 16-வது வார்டில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரம், பண்ருட்டி வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகத்திற்குட்பட்ட 16-வது வார்டு ஈஸ்வரன்கோயில் தெரு பகுதியில் குழந்தைகள் மையம் 2014 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, தற்போது அது அரசு இலவச கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், அப்பகுதியில் புதிய மையம் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.